Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 39 • செவ்வாய்க்கிழமை Tuesday • 09.12.2025 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

# கொடிநாள் நிதிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி, முதலமைச்சர் ஸ்டாலின் நன்கொடை வழங்கினர்





சென்னை:

கொடிநாளை ஒட்டி கொடிநாள் நிதிக்கு ஆளுநர், முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் நன்கொடை வழங்கினர். இந்தியாவின் முப்படை வீரர்களின் அரும் பணிகளையும், தியாகத்தையும் போற்றும் நாளாக ஆண்டுதோறும் டிச.7-ம் தேதி கொடிநாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆளுநர் ஆர்.என். ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஆகியோர் கொடிநாள் நிதிக்காக சென்னை ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடேவிடம் நன்கொடை வழங்கி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட்ட வாழ்த்துச் செய்தி: நம் தேசத்தின் எல்லைகளைப் பாதுகாத்து நாட்டின் இறையாண்மையை உயர்த்திப் பிடித்து வரும் நம் ராணுவ வீரர்களுக்கு, கொடிநாள் வணக்கங்களை நாம் சிரம் தாழ்த்தி நன்றியுடன் தெரிவித்துக் கொள்வோம். நமது தேசத்தையும், மக்களையும் பாதுகாப்புடன் வைத்திருக்கும் தன்னலமற்ற சேவை, துணிவு, தியாகம் ஆகியவற்றை நினைவூட்டும் நாளே கொடி நாள் ஆகும்.

நிபுணத்துவம், வீரம், கடமையில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கு இந்திய ராணுவம் புகழ் பெற்றது. ராணுவத்தினரின் கொடிநாள் நிதிக்கு நிதி அளிப்பதன் மூலம் படைவீரர்களின் கண்ணியத்துக்கும் நலனுக்கும் நாம் துணை நிற்பதுடன், அனுபவம் மிக்க நம் முன்னாள் படை வீரர்களுக்கும் போரினால் கணவரை இழந்திருப்பவர்களுக்கும் நம்மால் உதவ முடியும். கொடிநாள் நிதியை முழுமனதுடன் தாராளமாக வழங்குமாறு தமிழ்நாட்டு மக்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: தாயகம் காக்க தன்னலம் மறந்து பணியாற்றும் முப்படை வீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆயுதப்படை கொடிநாளில் நாட்டு மக்களின் சார்பில் எனது வணக்கங்கள்.

மக்கள் அச்சமின்றிப் பாதுகாப்பாக வாழ, உயிரைத் துச்சமாக எண்ணி, கடுமையான சூழல்களில் கண்ணுறங்காமல் காவல் காக்கும் படைவீரர்களின் பணி ஈடு இணையற்றது. தியாகத்தீரர்களின் மறுவாழ்வுக்கும் அவர்களின் குடும்ப நலனுக்காகவும் கொடிநாள் நிதியளிப்பது குடிமக்களான நம் அனைவரின் கடமை.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்: முப்படை வீரர்களின் வீரத்தைப் போற்றும் வகையிலும், போரில் தியாகம் புரிந்த வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்துக்கும் உதவும் வகையிலும், கொடி நாள் நிதிக்கான நன்கொடை அளித்தோம்.

நாட்டுக்குள் நாம் நல்வாழ்வு வாழ, தங்கள் உயிரையும் துச்சமெனக் கருதி எல்லையைப் பாதுகாக்கும் படை வீரர்கள் நன்றிக்குரியவர்கள். பரந்த மனப்பான்மையுடன் கொடி நாள் நிதி அளிப்போம். படை வீரர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் என்றும் துணை நிற்போம்.

# “ரூ.1,020 கோடி ஊழல் விவகாரத்தில் விசாரணைக்கு முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிடுவாரா?” எடப்பாடி பழனிசாமி கேள்வி



சென்னை: முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அமைச்சரவை கொள்ளையடித்த ஊழல் பணத்தையெல்லாம் மீட்டெடுத்தாலே, தமிழ்நாட்டுக்கு ஓராண்டுக்கான பட்ஜெட்டையே தாக்கல் செய்துவிடலாம் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் டெண்டர் எடுப்பதில் மட்டும் ரூ.1,020 கோடி ஊழலைக் கண்டறிந்துள்ளதாக அமலாக்கத் துறை, தமிழக பொறுப்பு டி.ஜி.பி.க்கு கடிதம் எழுதியுள்ளதாக செய்திகள் வருகின்றன.

ஸ்டாலின் மாடல் திமுக அரசின் அமைச்சர் கே.என்.நேரு, தனது உறவினர்கள் வாயிலாக டெண்டருக்கு 7.5% முதல் 10% வரை கமிஷன் கொள்ளை அடித்துள்ளது, இக்கடிதம் வாயிலாக வெளிவந்துள்ளது.

கழிப்பறை கட்டுவது முதல், நபார்டு வங்கி திட்டங்கள் வரை பட்டியல் போட்டு, 20%, 25% வரை பல்வேறு நிலைகளில் இந்த மெகா ஊழல் நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், இதெல்லாம் 'Tip of the Iceberg' தான் என தெரிவித்துள்ள அமலாக்கத்துறை, இதனை முழுமையாக விசாரிக்குமாறு தெரிவித்துள்ளது.

வரலாறு நெடுக விஞ்ஞான ஊழல்களுக்கே பெயர்போன கட்சியான திமுக நடத்தும் ஸ்டாலின் மாடல் ஆட்சி என்பதே, வெறும் 'கமிஷன் - கலெக்‌ஷன் - கரப்ஷன் மாடல்' தான் என்பதை நான் அடிக்கடி தெரிவித்து வருகிறேன்.

ஏற்கெனவே அமலாக்கத் துறை அனுப்பிய ரூ.888 கோடி #CashForJobs முறைகேட்டை இன்று வரை விசாரிக்காமல், ஊழல் அமைச்சரைக் காப்பாற்றி வருகிறது ஸ்டாலின் அரசு. தற்போது, அடுத்த ஊழலும் வெளிவந்துள்ளது.

ஸ்டாலின் தலைமையிலான திமுக அமைச்சரவை கொள்ளையடித்த ஊழல் பணத்தையெல்லாம் மீட்டெடுத்தாலே மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை மாநில அரசே செயல்படுத்தலாம். ஆண்டுதோறும் மாணவர்களுக்கு லேப்டாப் கொடுத்திருக்கலாம்.

பொங்கலுக்கு ரேஷன் கார்டுக்கு ரூ.5000 தாராளமாக வழங்கலாம். அவ்வளவு ஏன், தமிழ்நாட்டுக்கு ஓராண்டுக்கான பட்ஜெட்டையே தாக்கல் செய்துவிடலாம்.

இவ்வளவு மக்கள் பணத்தை வாரி சுருட்டிக் கொண்டு, இன்னும் எத்தனை நாட்கள் தானும், தன் சகாக்களும் தப்பித்துக் கொள்வோம் என நினைத்துக் கொண்டிருக்கிறார் ஸ்டாலின். காலம் மாறுகிறது. காட்சிகள் மாறத் தொடங்கிவிட்டன.

அதிமுக தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, திமுக-வின் ஊழல் கறைவேட்டிகள் யாராக இருந்தாலும், கம்பி எண்ணப்போவது உறுதி.

உண்மையிலேயே ஸ்டாலினுக்கு மடியில் கனமில்லை என்றால், வழியில் பயமின்றி இந்த ஊழல்கள் குறித்து நேர்மையான விசாரணை நடத்த உத்தரவிடவேண்டும். செய்வாரா?" என்று பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# எத்தனை தேர்தலில் தோற்றாலும் கவலையில்லை; பாஜவுக்கு எதிராக போராடுவோம்; பார்லிமென்டில் பிரியங்கா காந்தி பேச்சு



புதுடில்லி: "எத்தனை தேர்தலில் தோற்றாலும் கவலையில்லை. பாஜவுக்கு எதிராகவும், அதன் கொள்கைக்கு எதிராகவும் தொடர்ந்து போராடுவோம்," என லோக்சபாவில் காங்கிரஸ் எம்பி பிரியங்கா பேசினார்.

இரண்டு காரணங்கள்

வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு நிறைவுகுறித்து லோக்சபாவில் நடந்த சிறப்பு விவாதத்தில் காங்கிரஸ் எம்பி பிரியங்கா பேசியதாவது: பாஜ தேர்தலுக்காக பணியாற்றுகிறது. நாங்கள் நாட்டுக்காக பணியாற்றுகிறோம். எத்தனை தேர்தலில் தோற்றோம் என்பது பிரச்னையில்லை. இங்கு அமர்ந்து, உங்களுக்கு எதிராகவும், உங்களது கொள்கைக்கு எதிராகவும் போராடுவோம். நாட்டுக்காக போராடுவோம். எங்களை உங்களால் தடுக்க முடியாது.

வந்தே மாதரம் பாடல் குறித்து இன்று விவாதம் நடப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று மேற்கு வங்கத்தில் தேர்தல் வருகிறது. இதுபோன்ற சூழ்நிலையில் பிரதமர் தனது பங்கை விரிவுபடுத்த விரும்புகிறார். இரண்டாவது, நாட்டின் விடுதலைக்காக போராடியவர்கள், தங்களது உயிரை தியாகம் செய்துள்ளனர். அவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு விரும்புகிறது. இதன் மூலம் பொது மக்கள் தொடர்புடைய பிரச்னைகளில் இருந்து திசைதிருப்ப, மக்களின் கவனத்தை திசைதிருப்ப அரசு விரும்புகிறது.

பிரதமர் மோடியின் தன்னம்பிக்கை குறைகிறது. அவரின் கொள்கைகளால் நாடு பலவீனம் அடைகிறது. இதனால், வெட்கப்பட்டுக் கொண்டு, அதிகாரத்தில் உள்ள எனது நண்பர்கள் அமைதியாக இருக்கிறார்கள். மக்கள் மகிழ்ச்சியற்றவர்களாகவும், துயரத்திலும் உள்ளனர். மக்கள் பிரச்னைகளால் சூழப்பட்டுள்ளனர். நீங்கள் அவற்றை தீர்க்கவில்லை. பொது மக்களின் கவனத்தை திசைதிருப்பவே விரும்புகின்றனர்.

இதனால், வந்தே மாதரம் குறித்து இன்று விவாதிக்கின்றனர். வந்தே மாதரம் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நிறைந்துள்ளது. அது குறித்து விவாதிக்கப்படவில்லை. இன்று பிரதமர் விவாதத்தை துவக்கியுள்ளார். அவர் பேச்சு சிறப்பானதாக இருந்தது என்பதை சொல்வதற்கு தயக்கமில்லை. ஆனால், உண்மையை பற்றி பேசும்போது அவர் பலவீனமாகி விடுகிறார். உண்மையை மக்கள் எப்படி சொல்ல வேண்டும் என்பதும் ஒரு கலை. நான் இந்த அவைக்கு புதியவர். நான் மக்களின் பிரதிநிதி. நடிகை கிடையாது.

ஹாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், ராஜேந்திர பிரசாத், அம்பேத்கர், மவுலானா ஆசாத், சர்தார் வல்லபாய் படேல், நேதாஜி ஆகியோரை காட்டிலும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தில் உள்ளதால், ஆளுங்கட்சியில் உள்ள எனது நண்பர்கள் ஆணவத்தில் உள்ளனர். தேசிய பாடலில் உள்ள ஒரு பகுதி நீக்கப்பட்டது, நாட்டின் விடுதலைக்காக போராடி உயிரை நீத்தவர்களுக்கு செய்யப்பட்ட அவமானம் என பிரதமர் மோடி தனது பேச்சில் குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதமர் நேரு தற்போது விமர்சிக்கப்படுகிறார். நாட்டின் விடுதலைக்காக அவர் 12 ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார். நாடு விடுதலை பெற்ற பிறகு, 17 ஆண்டுகள் அவர் பிரதமர் ஆக இருந்துள்ளார். நீங்கள் எவ்வளவு விமர்சனம் செய்தாலும், அவர் இஸ்ரோவை உருவாக்காவிட்டால், இன்று மங்கள்யான் திட்டம் சாத்தியம் இல்லை. டிஆர்டிஓ அமைப்பை அவர் உருவாக்கவிட்டால், தேஜஸ் விமானம் சாத்தியம் ஆகி இருக்காது. எய்ம்ஸ் மருத்துவமனை உருவாக்கப்படாவிட்டால், கோவிட் என்ற சவாலை எப்படி சமாளித்து இருப்பீர்கள். ஜவஹர்லால் நேரு, இந்த நாட்டுக்காக வாழ்ந்தார். இந்த நாட்டிற்காக சேவை செய்யும்போது உயிரிழந்தார்.

இவ்வாறு பேசினார்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### கோவை குனியமுத்தூர் பகுதியில் உள்ள

# ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 'ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2025'ன் பிரம்மாண்ட இறுதி சுற்று துவங்கியது

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2025ன், மென்பொருள் பதிப்பின், இறுதிப்போட்டி,கோவை குனியமுத்தூரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா பொறியி-



யல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் டிசம்பர் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இதன் துவக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. மத்திய அரசின் சார்பாக தேசிய அளவில், நடைபெறும் இந்த போட்டிகள், கோவை கிருஷ்ணா கல்லூரியில், தொடர்ந்து 6வது முறையாக வழங்கப்பட்டுள்ளது

இந்நிகழ்வின்துவக்க விழாவிற்கு, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் தலைவரும், நிர்வாக அறங்காவலருமான எஸ். மலர்விழி தலைமை தாங்கினார். இந்தியப் பம்ப் உற்பத்தியாளர்சங்கத்தின் தலைவரும், டெக்கான் இண்டஸ்ட்ரீஸின் நிர்வாக இயக்குநருமான கே.வி. கார்த்திக், இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர். கே. பொற்குமரன் வரவேற்புரை வழங்கினார் அப்பொழுது மாணவ மாணவிகள் மத்தியில் கூறியதாவது.. இந்த இறுதிப் போட்டியில் இந்தியாவின் பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து மொத்தம் 108 மாணவர்கள் அடங்கிய 20 குழுக்கள் பங்கேற்றுள்ளதாகவும், அவர்கள் அனைவரும் மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் சவாலான 4 புதிர் அறிக்கைகளுக்கு தீர்வு காண உள்ளதாகவும் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற கே.வி. கார்த்திக் கூறியதாவது..

ஜல் சக்தி அமைச்சகத்தின் இப்போடிக்கான புதிர் அறிக்கைகள், இந்தியாவின் நீர்பாதுகாப்புப் பணிக்கு மிகவும் அவசியமானவை என்றார்.

"இந்த ஹேக்கத்தானில் நீங்கள் அளிக்கும் தீர்வுகள், நமது வாழ்க்கை முறையை மேம்படுத்துவதுடன், மத்திய அரசின் 'விக்சித் பாரத் 2047' இலக்கை நோக்கிய முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும்," என்றும் அவர் கூறினார். இந்த ஹேக்கத்தான் ஒரு போட்டி மட்டுமல்ல, இது ஒரு பொறுப்பு, நமது நாட்டின் மிகப்பெரும் வளர்ச்சி பாதைக்கு இது ஒரு கட்டுமானப் பணி போன்றது. 'விக்சித் பாரத் 2047' இலக்கில், ஒவ்வொரு வீட்டிற்கும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான குடிநீர் 24 மணி நேரமும் கிடைக்க வேண்டும் என்று கனவு உள்ளது. இந்த இலக்கை அடைய, நவீன, உறுதியானமற்றும்நிலையான நீர் உள்கட்டமைப்பை நாம் வடிவமைத்து பயன்படுத்த வேண்டும். இது இங்குள்ள ஒவ்வொரு பொறியாளரின் பணியாகும்," என்றும் அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி காணொளிமூலம்போட்டியாளர்களுடன் உரையாடினார். இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரி கே. சுந்தரராமன், மற்றும்நடுவர்கள்,வழிகாட்டுனர்கள், மற்றும் தொழில்துறை வல்லுநர்கள் மாணவ மாணவியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு மாவட்டம் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கும் தொகுப்பு சட்டம்




திரும்ப பெற கோரி மத்திய அரசை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகே. மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் கட்சியின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் எஸ் எஸ் பாலாஜி அவர்களின் தலைமையில்

காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதி மண்டல செயலாளர் செங்கை தமிழரசன் மண்டல துணைச் செயலாளர் இளையவளவன் மாவட்ட செயலாளர்கள் கேது என்கிற தென்னவன் காஞ்சி.தமிழினி தாம்பரம் சாமுவேல் திருநீர்மலை தமிழரசன் மற்றும் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி செயலாளர் பாக்கம் பேரறிவாளன் மாவட்ட துணை அமைப்பாளர் செல்வம் ஒன்றிய செயலாளர்கள் முகிலன் கதிர்வாணன் தயாநிதி பன்னீர்செல்வம் மதுராந்தகம் நகர செயலாளர் கிட்டு பிரபாகரன் கருங்குழி பேரூர் செயலாளர் மலை சமத்துவன் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் வசந்தவாடி சிவா சாம்ராஜ் திருமுக்காடு சத்யா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவமாக இருக்கும் வகையில் அவர்களுக்கு நியமன உறுப்பினர் பதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதை தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் உள்ள முத்தரையர் நகரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி மு.ஆறுமுகம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துபெற்றார். இந்நிகழ்வின்போது மாமன்ற உறுப்பினர் பவானி, வட்டப்பிரதிநிதிகள் மார்ஷல், இசக்கிமுத்து, சிதம்பரனார் சங்குகுளி தொழிலாளர் சங்க தலைவர் பரமசிவம், செயலாளர் அந்தோணி, பொருளாளர் ரவி, தூத்துக்குடி முத்தரையர் சமுதாய சங்க தலைவர் சந்தன செல்வம், மேட்டுப்பட்டி முத்தரையர் சமுதாய சங்கத் தலைவர் முத்து மற்றும் முத்தரையர் சமுதாய சங்க உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.



# கன்னியாகுமரி மாவட்டம் ஆரோக்கியபுரத்தில் புதிய நியாய விலைக்கடை திறப்பு

குமரி மாவட்டம் லீபுரம் ஊராட்சிக்குள்பட்ட ஆரோக்கியபுரத்தில் புதிய நியாய விலைக்கடை திறப்பு விழா நடைபெற்றது. ஆரோக்கியபுரம் மீனவ மக்களின் கோரிக்கையை ஏற்று சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நியாய விலைக்கடை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு என்.தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். ஆரோக்கியபுரம் பங்குத்தந்தை கிங்ஸ்லி கலந்து கொண்டு புதிய நியாயவிலைக்கடையைதிறந்து வைத்தார்.

லீபுரம் ஊராட்சி அதிமுக பொறுப்பாளர் லீன் வரவேற்று பேசினார். அகஸ்தீசுவரம் வடக்கு ஒன்றிய அதிமுக செயலர் எஸ்.ஜெஸீம், வட்டார வளர்ச்சி அலுவலர் நீலபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நீலபெருமாள், மீன்வளத்துறை உதவி இயக்குநர் தீபா, மாவட்ட அதிமுக இளைஞர் பாசறை செயலாளர் அக்சயா கண்ணன் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். லீபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் ஜெயகுமாரி நன்றி கூறினார்.

### துணை முதல்வர் உதயநிதி பிறந்த தினத்தையொட்டி

# ஆவுடையானூரில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தார்

பாவூர்சத்திரம்,துணை முதல்வர் உதயநிதி



ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி ஆவுடையானூரில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாமினை திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதிதொடங்கி வைத்தார். திமுக இளைஞரணி செயலாளரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி கீழப்பாவூர் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் மாவட்ட மருத்துவர் அணி சார்பில் ஆவுடையானூரில் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர்வே.ஜெயபாலன் தலைமை வகித்தார். மாநில மருத்துவர் அணி துணை செயலாளரும், தென்காசி சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான டாக்டர் கலைகதிரவன் முன்னிலை வகித்தார். ஒன்றிய பொறுப்பாளர் ஜெ.கே.ரமேஷ் வரவேற்றார். மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் அன்பரசன் தொகுப்புரை ஆற்றினார்.

திமுக மாநில அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமினை தொடங்கி வைத்தார். இம்முகாமில் மாநில விவசாய அணி துணை செயலாளர் செல்லப்பா, கீழப்பாவூர் யூனியன் சேர்மன் காவேரிசீனித்துரை, மாவட்ட கவுன்சிலர் இரா.சாக்ரடீஸ், ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜேஸ்வரி, தர்மராஜ், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் மாரிமுத்து, தொகுதி அமைப்பாளர் தமிழரசன், ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, சேக்முகமது, சுரண்டை நகர செயலாளர் கணேசன், நி;;ர்வாகிகள் சொட்டு சுப்பிரமணியன், ரவி, செந்தூர் முருகன், ராஜேந்திரன், சமுத்திரபாண்டி, தங்கராஜ், டால்டன், முத்துகுட்டி, செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவர்கள் தமிழரசன், அன்பரசன், செல்வரெங்கராஜு, தமிழருவி, அரவிந்த் மேனன், விக்னேஷ், அருள்விஜயகுமார், தேவிஸ்ரீ, கௌதமி உள்ளிட்டோர் பங்கேற்று மருத்துவ சிகிச்சை மேற்கொண்டனர். சுமார் 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயன்பெற்றனர். அனைவருக்கும் இலவச மருத்துவ பரிசோதனைகள், மருந்துகள், மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது.





தென்காசி பழைய பேருந்து நிலையம் அருகே சிஐடியு சார்பில் தூய்மை பணியாளர்களின் பணி நிரந்தரம் செய்யக்கோரி நாடு தழுவிய ஒரு நாள் வேலை நிறுத்தம் மற்றும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது

வரி விளம்பரங்கள்

தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# மின்தடை



ஈரோடு மாவட்டம் காந்திநகர் 110/332211 கி. வோ துணை மின் நிலையத்திற்குட்பட்ட 22KV அய்யன்வலசு மின்பாதையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், 10.12.2025 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை மின் விநியோகம் இருக்காது என செயற்பொறியாளர் அறிவித்துள்ளார். காந்திநகர், காருன்கரடு, காஞ்சிக்கோவில், LMS பாளையம், அரியன்காடு, பாலசுந்தரபுரம், பள்ளப்பாளையம், சென்னியம்பாளையம், கரிச்சிக்கவுண்டன்பாளையம், அய்யன்வலசு, தங்கமேடு, செங்காளிபாளையம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் இருக்காது.

### பு.கொணலவாடி கிராமத்தில்

# புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்ட வலியுறுத்தி தரையில் அமர்ந்து தர்ணா போராட்டம்

கள்ளக்குறிச்சிமாவட்டம்உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பு.கொணலவாடி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்ளது இந்தப் பள்ளியில் அந்த கிராமத்தைச் சேர்ந்த





சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர் இந்த நிலையில் அந்தப் பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடம் மட்டுமே உள்ளதால் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்ட வேண்டும் என கிராம மக்கள் அரசு உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை அளித்தனர் இந்த நிலையில் அந்த கிராமத்தில் கூடுதல் பள்ளி கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது ஆனால் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்ட இடம் இல்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் பள்ளியின் அருகே உள்ள பகுதலைந்த இடிந்து விழும் நிலையில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்துவிட்டு அங்கு புதிய வகுப்பறை கட்டிடம் கட்ட வேண்டும் என கிராம மக்கள் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை இந்த நிலையில் இன்று பள்ளி மேலாண்மை குழு தலைவர் சித்ராதலைமையில்உளுந்தூர்பேட்டைவட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வந்த கிராம மக்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் இல்லாததால் அவரது அறையின் முன்பாகதரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனால் அங்கு திடீர் பரபரப்பு நிலவியது இது பற்றி தகவல் அறிந்த துணை வட்டார வளர்ச்சி அலுவலர் உடனடியாக விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவது குறித்தும் அங்கன்வாடி மைய பழைய கட்டிடத்தை இடிப்பது குறித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்ததன் பேரில் கிராம மக்கள் போராட்டத்தைகைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.



கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அடுத்த, மத்வராயபுரம் பகுதியில் உள்ள

# குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது



கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அடுத்த, மத்வராயபுரம் கூடுதுறை பகுதியில், அருள்மிகு குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது இத்திருக்கோவிலின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் விழாவெகுவிமர்சையாக நடைபெற்றது.

பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து தீர்த்தம் கொண்டு வரப்பட்டு யாக குண்டம் அமைத்து பூஜை செய்யப்பட்ட புனித நீரை விநாயகர், குழந்தை வேலாயுதசாமி,துர்க்கை அம்மன்,சப்த கன்னிமார்கள்,கருப்பண்ணசாமி,இடும்பன் சுவாமி, அகத்தியர்,நவகிரக மூர்த்திகளுக்கு கும்பத்திலும் மற்றும் விமான கோபுரத்திலும் புனித நீர் ஊற்றப்பட்டது.

இதில்திரளானபக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் மேற்கொண்டனர். பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் மோட்டார் பம்ப் மூலமாக புனித நீர் தெளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் கோவில் நிர்வாகிகள் சோமசுந்தரம், மோகன் குமார்,ஆனந்தகுமார், கதிர்வேல்,ராமசாமி, நடராஜன்,பிரபு, கதிர்வேல்,ராஜசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரை அருகே naanal பெண்களுக்கான ஆடை பிரத்தியோக ஷோரூம் திறப்பு விழா




மதுரை கீழத்தெரு துவரிமானில் பெண்களுக்கான பிரத்யோக ஷோ ரூம் திறப்பு விழாவினை உரிமையாளர் பிரியா சங்கர் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார் பின்பு கூறும்பொழுது எங்களுடைய ஷோரூமில் பெண்களுக்கான பிரத்தியோக ஆடைகள் பிரபலமுன்னணிநிறுவனங்களில்இருந்துதயாரிக்கப்பட்டஆடைகள்விற்பனைக்காகவும் 10,சதவீத தள்ளுபடியும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில்,15 சதவீதம் தள்ளுபடியும் விற்பனை செய்யப்படுகிறது என்று தெரிவித்தார் உடன் ராஜசேகர் உள்ளிட்ட வாடிக்கையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகத்தில் ஐயப்பன் கோவில் விளக்கு பூஜை

## மதுராந்தகம் நகர கழக செயலாளர் பூக்கடை கே.சி.சரவணன் அன்னதானம் வழங்கினார்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் அமைந்துள்ள தப்பா கிருஷ்ணன் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற கடை கே.சி.சரவணன் இவர்கள் கலந்து கொண்டு ஐயப்பன்



சுப்பிரமணி ஆலயத்தில் உள்ள ஸ்ரீ ஐயப்பன் சுவாமிக்கு இன்று விளக்கு பூஜை நடைபெற்றது பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும்நிகழ்ச்சியை அதிமுக முன்னாள் நகர் மன்ற கவுன்சிலர் மாவட்ட பிரதிநிதி சித்-நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட காஞ்சிபுரம்

தேமுதிக மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம் .ராஜேந்திரன், மதுராந்தகம் அதிமுக நகர கழக செயலாளர் பூக்-கோயிலில் நடைபெற்ற விளக்கு பூஜையில் பங்கேற்ற பக்தர்கள் மற்றும்500க்கும்மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் காணொலிக் காட்சியின் வாயிலாக சேலம் மாவட்டத்தில் சங்ககிரி மற்றும் எடப்பாடியில் சிறு விளையாட்டரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்ததைத் தொடர்ந்து அமைச்சர் இரா.இராஜேந்திரன் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்






தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக (08.12.2025) சேலம் மாவட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி கிராமத்தில் ரூ.262 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் சிறு விளையாட்டரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தார்கள்.

இதனைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டம். எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தெரிவித்ததாவது தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறையின் சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என்ற அறிவித்தார்கள். அந்தவகையில் சட்டமன்ற தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினைத் தூண்டும் வகையில் சிறு விளையாட்டுஅரங்கம்அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி சேலம் மாவட்டத்தில் சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி கிராமத்தில் ரூ.262 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரால் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக இன்றையதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கிடையே விளையாட்டு கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்படும் இச்சிறு விளையாட்டரங்கத்தில் ஓடுகளம். கேலரி கூடைப்பந்து மைதானம். கால்பந்து மைதானம், கையுந்துபந்து மைதானம், கோ.கோ மைதானம், கபடி மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகிய விளையாட்டு திடல்கள் அமைக்கப்படவுள்ளது. இவ்வாறு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா. இராசேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பமகேஸ்வரி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் எஸ்.சிவரஞ்சன், நகர்மன்ற தலைவர் டி.எஸ். எம்.பாஷா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மத்தூரில் வட்டார தமிழ்நாடு அறிவியல் இயக்க கிளை மாநாடு – மாநாட்டில் மூடநம்பிக்கைக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொள்ள தீர்மானம்



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த மத்தூரில் வட்டார தமிழ்நாடு அறிவியல் இயக்க கிளை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் பொதுக் குழு செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட வட்டார நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் செயலாளர் பிரவீன்குமார்வரவேற்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான செயல்பாட்டு அறிக்கையையும்பொருளாளர் அறிக்கையையும் வாசித்தார். வட்டார தலைவர்ராஜாதலைமை வகித்தார். மாநாட்டில் புதிய நிர்வாகிகள், மாவட்ட செயலாளர் சந்தோஷ் அவர்களால் முன்மொழியப்பட்டனர். 21 பேர் கொண்ட செயற்குழு உருவாக்கப்பட்டு அதிலிருந்து மத்தூர் வட்டார கௌரவ தலைவராக ஜானிபாஷா அவர்களும், வட்டார தலைவராக சவுந்தரபாண்டியன் அவர்களும் வட்டார செயலாளராக ஜெகந்நாதன் வட்டார பொருளாளராக கோமளாதேவி அவர்களும் இணைச் செயலாளர்களாகராஜாமற்றும்சத்யா ஆகியோரும் வட்டார துணைத்தலைவர்களாக சரண்யா மற்றும் அப்துல்ரஹ்மான் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகளை முன்னாள் மாவட்ட தலைவர் வீரமணி,முன்னாள் வட்டார தலைவர்கள் சேகர், சரவணன், முன்னாள் வட்டார செயலாளர் பிரவீன்குமார் உள்ளிட்ட அனைவரும் வாழ்த்திப் பேசினர். புதிய நிர்வாகிகள் அனைவரும் ஏற்புரை வழங்கினர். மாநாட்டில் அறிவியல் மக்களுக்கே! அறிவியல் நாட்டிற்கே! என்ற அடிப்படையில் செயல்படுதல், மூட நம்பிக்கைக்கு எதிரான பிரச்சாரம் மேற்கொள்ளுதல்,மாநில வழிகாட்டுதல் அடிப்படையில் செயல்பாடுகளை அனைவரிடமும் கொண்டு செல்லுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டன. மாநாட்டின் முடிவாக வருகின்ற 01.01.2026 அன்று 5-ஆம் ஆண்டு புத்தகங்களோடு புத்தாண்டு கொண்டாட்டம் நிகழ்வை மத்தூர் பேருந்து நிலையத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. நிகழ்வை முன்னாள் மாவட்ட தலைவர்சர்ஜான் ஒருங்கிணைத்தார்.

# ஒரு கட்சிக்கு பூத் கமிட்டி பலமாக இருந்தால் மட்டுமே தேர்தலில் அதிக வாக்கு பெற முடியும்

## தூத்துக்குடி தமிழக வெற்றிக்கழக பொறுப்பாளர் அஜிதா ஆக்னல் பேச்சு






தூத்துக்குடி மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி மற்றும் ஓட்டப்பிடாரம் சட்டமன்றதொகுதிபூத்கமிட்டி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி மற்றும் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள கட்சி நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் அப்போது தேர்தல் நேரத்தில் பூத் ஏஜெண்டுகள் எப்படி பணியாற்ற வேண்டும் எப்படி பணியாற்றினால் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற முடியும் என்ற ஆலோசனை நடைபெற்றது.. அப்போது மேடையில் பேசிய தூத்துக்குடி மத்திய மாவட்ட செயலாளர் அஜிதா ஆக்னல் கூறுகையில் ஒரு கட்சிக்கு பூத் கமிட்டி பலமாக இருந்தால் மட்டுமே தேர்தலில் அதிக வாக்குகளை பெற முடியும் என கூறிய அவர். மக்கள் தொடர்பான பிரச்சனைகளை நாம் நேரடியாக மக்களுக்கு செய்து கொடுக்கும் போது மக்கள் மத்தியில் நமது கட்சியின் மீதான நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ள முடியும் என கூறிய அஜிதா ஆக்னல்.

பின்பு நாம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் மக்களுக்கு செய்யக்கூடிய நலத்திட்டங்களை இந்த பூத் கமிட்டி மூலமாக தான் செய்ய முடியும் நீங்கள் தான் மக்களுடன் மக்களாக இருக்கக்கூடியவர்கள் அதனால் வரும் 26 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றினால் நாம் அதிகப்படியான வாக்குகளை பெற முடியும் என கூறினார்.

# சட்டவிரோதமாக ஜம்மு காஷ்மீருக்குள் நுழைந்த சீனர் கைது



ஸ்ரீநகர்: சட்டவிரோதமாக ஜம்மு காஷ்மீருக்குள் நுழைந்தசீனாவைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது;சீனாவைச் சேர்ந்த ஹூ காங்டை,29, என்பவர் கடந்த நவம்பர் 19ம் தேதி சுற்றுலாவிசாவில்டில்லி வந்தார். வாரணாசி, ஆக்ரா, புதுடில்லி, ஜெய்ப்புர், சர்னாத், கயா மற்றும் குஷி நகர் போன்ற புத்த மத தலங்களை பார்வையிட மட்டுமே அவருக்கு அனுமதியளிக்கப்பட்டது. இவர் நவம்பர் 20ம் தேதி லேவுக்கு விமானம் மூலம் சென்றுள்ளார். அங்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வருகைப்பதிவு குறிப்பேட்டில் பதிவு செய்யாமல், வெளியேறியுள்ளார்.

பின்னர், ஜான்ஸ்கர் பகுதியில் 3 நாட்கள் தங்கியிருந்து இமாலய மலையை ஒட்டியுள்ள இடங்கள் என பல பகுதிகளை சுற்றிப் பார்த்துள்ளார். அதன்பிறகு டிசம்பர் 1ம் தேதி ஸ்ரீநகர் வந்துள்ளார். மேலும், உள்ளூரில் சட்டவிரோதமாக சிம்கார்டையும் வாங்கி பயன்படுத்தியுள்ளார். அவரது செல்போனை ஆய்வு செய்ததில், சிஆர்பிஎப் ராணுவ தளங்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்டம்370ரத்துசெய்யப்பட்டது கூகுளில் தேடியுள்ளார். மேலும், தெற்கு காஷ்மீரில் உள்ள ராணுவ தளங்களுக்கு அருகில் உள்ள இடங்களுக்கு சென்று வந்துள்ளார்.

ஹூ காங்டை பாஸ்டன் பல்கலையில் பட்டம் பெற்றுள்ளார். முன்பு அமெரிக்கா, நியூசிலாந்து,பிரேசில்,ஹாங் காங் உள்ளிட்ட நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். விசா விதிமுறைகளை மீறியதால், அவரை நாடு கடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது, என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி 34வது வார்டுக்கு அசோக்நகர் நியாய விலைக் கடையில் அமைச்சர் கீதாஜீவன் திடீர் நேரில் ஆய்வு



தூத்துக்குடி தமிழக அரசின் சார்பில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவையான பொருட்கள் ரேஷன் கடை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 34வது வார்டு பகுதியில் உள்ள அசோக்நகர் 2ம் தெருவில் உள்ள நியாய விலைக்கடையில்வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் திடீரென ஆய்வு மேற்க்கொண்டார். பணியில் இருந்த அலுவலர்களிடம் எல்லா பொருட்களும் சரியாகவந்துசேர்கிறதா பொதுமக்களுக்கு பொருட்கள் முறையாக வழங்குகிறீர்களா? என்று கேட்டார்.

முறையாக வருகின்ற பொருட்களை வழங்கி வருகிறேன் என்றார். பின்னர் அமைச்சர் பொருட்கள் எதுவும் குறைவாக வந்தாலும் தரமான பொருட்களாக இல்லாமல் இருந்தாலும் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் இருப்பு இல்லைஎன்றால் அதை முறையாகபொதுமக்களுக்கு தங்களது விளம்பர பலகை மூலம் தெரிவித்து எந்த தேதியில் பெற்றுக்கொள்ளலாம்என்றவிபரத்தையும் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த ஆய்வின் போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர் சந்திரபோஸ் மற்றும் மணி அல்பட் உடனிருந்தனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கூவாகம் கிராமத்தில் உள்ள

# திருநங்கைகளின் குலதெய்வமாக விளங்கும் உலகப் புகழ்பெற்ற கூத்தாண்டவர் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடந்தது



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கூவாகம் கிராமத்தில் திருநங்கைகளின் குலதெய்வமாக வழிபட்டு வரும் உலகப் புகழ்பெற்ற ஆயிரம்ஆண்டுகள் மிகவும் பழமையான கூவாகம் கூத்தாண்டவர் கோவில்கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதையொட்டி சனிக்கிழமை காலைகணபதிஹோமம் நடைபெற்றது இதைத்தொடர்ந்து அன்று மாலை அனுக்ஜை அங்குரார்பணம் வாஸ்து சாந்தி மகாபூர்ணாகுதி பூஜைகள் செய்யப்பட்டது இதைத் தொடர்ந்து நேற்று ஞாயிற்றுக்கிழமையாகசாலைபூஜைகள் நடைபெற்றது அப்பொழுது புனித நீர் அடங்கிய கலசங்களை யாகசாலையில் வைத்து பட்டாச்சாரியார்கள் சிறப்பு ஹோமங்கள் நடத்தினர் இதைத்தொடர்ந்து இன்று காலை மகா ஹோமம் நடைபெற்ற பின்பு கடன் புறப்பாடு நடைபெற்றது அப்பொழுது யாகசாலையில் சிறப்பு பூஜை செய்யப்பட்ட புனித நீர் அடங்கிய கலசங்களை பட்டாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மங்கள வாத்தியங்களுடன் கொண்டுவந்து கோபுர கலசத்தின் மீது புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர் தொடர்ந்து மகா தீபாரதனையும் நடைபெற்றது அப்பொழுது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா கோஷமிட்டு கூத்தாண்டவரை வழிபட்டனர் இதைத்தொடர்ந்துமூலவருக்குபுனித நீர்ஊற்றிகும்பாபிஷேகம் நடைபெற்றது தொடர்ந்து மகா தீபாரதரையும் நடைபெற்றது இதில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், திருக்கோவிலூர் சார் ஆட்சியர் ஆனந்த்குமார்சிங் உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிக்கணன் மற்றும் இந்து சமய அறநிலை துறை அதிகாரிகள் கூவாகம் தொட்டி நத்தம் கீழ்குப்பம் வேலூர் உளுந்தூர்பேட்டைபண்ருட்டி விழுப்புரம் திருக்கோவிலூர் திருவெண்ணைநல்லூர் உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து அரசு அதிகாரிகள் திருநங்கைகள் கொண்டனர். கூவாகம் கூத்தாண்டவர் கோவில் மகா கும்பாபிஷேகத்தையொட்டி கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மாதவன் உளுந்தூர்பேட்டைதுணைகண்காணிப்பாளர் அசோகன் ஆகியோர் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்புபணியில் ஈடுபட்டனர் மேலும் கூவாகம் கூத்தாண்டவர் கோவில் பகுதியில் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

# ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுகொண்டார்



குடிமைப்பணிகள் முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்ற பார்வை குறைபாடுயுடைய மாற்றுத்திறனாளி மாணவிக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக ரூ.50,000/- காசோலை வழங்கினார். ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (08.12.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை. கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 225 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட இந்திய குடிமைப்பணிகள் முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்ற ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், காளிங்கராயன்பாளையம் பகுதியை சேர்ந்த செல்வி. ரா.காவியா என்ற கண் பார்வை குறைபாடுயுடைய மாற்றுத்திறனாளி மாணவிக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக ரூ.50,000/- காசோலையுடன் புத்தகம் மற்றும் சால்வை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பூபதி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (8.12.2025) ஈரோடு கே.கே.நகர் ரயில்வே நுழைவு பாலம் அருகில் மழைநீர் செல்வதற்கு ஏதுவாக கூடுதல் கால்வாய் அமைப்பது குறித்து இரயில்வே துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்தாலோசனை மேற்கொண்டு செயல்படுத்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் கந்தசாமியை, குழந்தைகள் நலக்குழுவிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர், உறுப்பினர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்



ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரை குழந்தைகள் நலக்குழுவிற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

அலுவலகத்தில், நேற்று (08.12.2025) ஈரோடு மாவட்ட ஆட்சியர் குழந்தைகள் நலக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

*2015 ஆம் ஆண்டின்* இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படிசமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசாணை எண் *286* நாள் *24.11.2025* -ன்படி ஈரோடு மாவட்டத்தில் குழந்தைகள் குழு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை மறு கட்டமைப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு உள்ளது.

அதன்படி ஈரோடு மாவட்டத்தில் புதிதாக குழந்தைகள் நல குழுவின் தலைவராக R.ரமா பிரபா அவர்களும் (8680810004), உறுப்பினர்களாக S.ஸ்ரீலேகா செல்வம் (8667295457), R.பிரிசிதா (9791684244), M.முகமது நசீர் (9385901948) G.தம்பி ராஜா (938553325) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட குழந்தைகள் நல குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள், நேற்று (08.12.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.மேலும்,ஈரோடு மாவட்டத்தில் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான உதவிகளுக்குகுழந்தைகள் நலக்குழு, அரசு ஆண் குழந்தைகள் இல்லம்,கொள்ளு காட்டு மேடு,கரூர்மெயின் ரோடு. ஈரோடு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆறாவது தளத்தில் இயங்கி வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இந்நிகழ்வின்போது, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரா.உமா மகேஸ்வரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில்

# ஈரோடு மாவட்டத்தில் போதைப்பொருட்கள் தடுப்பது குறித்த வாராந்திர ஆய்வுக்கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (08.12.2025) ஈரோடு மாவட்டத்தில் போதைப்பொருட்கள் தடுப்பது குறித்த வாரந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

ஈரோடு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் தடுப்பது குறித்த வாராந்திர ஆய்வுக்கூட்டம் (01.12.2025 முதல் 07.12.2015 வரை) மேற்படி ஆய்வுக்கூட்டத்தில் கடந்த வாரம் கஞ்சா 6.500 கிராம்,மாத்திரைகள் 100 எண்ணிக்கை (0.015 கிலோ) மற்றும் கஞ்சா சாக்லேட் 152 எண்ணிக்கை(0.830), முறையற்ற முறையில் விற்பனை செய்யப்பட்ட 142 IMFL பாட்டில்கள் மற்றும் வெளிமாநில மதுபாட்டில்கள் (2.820 லிட்டர்) ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் தடுப்பது தொடர்பாக உள்ளாட்சி, காவல்துறை, உணவு பாதுகாப்புத்துறை மற்றும் சுகாரதாரத்துறை மூலம் அமைக்கப்பட்ட 16 கூட்டுப்புலத்தணிக்கை குழுக்கள் இந்த வாரம் 45.475 கிலோ தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. ரூ.29,4500/- அபராதம் விதிக்கப்பட்டன, 10 கடைகள் மூடப்பட்டுள்ளது. 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். DRUG FREE TN APP மூலம் போதைப் பொருட்கள் விற்பனை குறித்து புகார்கள் பதிவு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. துறைவாரியாக மேற்படி செயலியை பதிவிறக்கம் செய்வது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் குறையீடு நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் தடைசெய்யபப்பட்ட போதைப்பொருட்கள் போன்ற செயல்களில் ஈடுபடும் நபர்களின் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா,உதவி ஆணையர்(கலால்) தியாகராஜன், உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தி.மு.க. அரசை கண்டித்து சிஐடியு தொழிற்சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்




கடந்த சட்டமன்றதேர்தலின்போதுதிமுகதேர்தல் அறிக்கையில் கிராம ஊராட்சி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்து காலம் முறை ஊதியம் வழங்கப்படும் பிரதி மாதம் ஐந்தாம் தேதிக்குள் மாத சம்பளம் வழங்கப்படும் தூய்மை காவலர் மற்றும் உயிர்களுக்கு பொங்கல் போனஸ் 3000 ரூபாய் வழங்கப்படும் என்பது உட்பட பல்வேறு வாக்குறுதிகளைதிமுக தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டு இருந்தது இந்த நிலையில் திமுக ஆட்சி அமைத்து நான்கு ஆண்டுகளை கடந்த நிலையில் இதுவரை கிராம ஊராட்சி ஊழியர்களுக்காக அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு சிஐடியு மாவட்ட செயலாளர் வீராசாமி தலைமையில் ஊராட்சி ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதில் சிஐடியு தொழிற்சங்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செந்தில் மாவட்ட தலைவர் சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்இதில்கிராமஊராட்சி ஊழியர்கள் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆப்ரேட்டர்கள் தூய்மை பணியாளர்கள் டெங்கு ஊழியர்கள் கணினி இயக்குனர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.